வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

எஸ்.டி.சி.எண்.2859/22

வழக்கு சாட்சி - அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிவேல் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.23

**(** எதிரி ஆஜர் இல்லை**.** எதிரி சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அரண்மனைப்புதுரில் குடியிருந்து வருகிறேன். நான் எல்எஸ்மில்லில் வேலை செய்துவருகிறேன். கடந்த 28.3.21ம் தேதியன்று 8மணியளவில் பங்களாமேடு சுந்ரேஷ்வர் கோவில் சாமிகும்பிட்டு விட்டு தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை கடந்து நடந்து சென்றுக்கொண்டிருந்தேன் மேற்கிலிருந்து கிழக்காக வந்த இருசக்கரவாகனத்தில் வந்த ஒரு பையன் வேகமாக வந்து என் மீது மோதிவிட்டான். அதில் எனக்கு கணுக்காலில் இரத்தாயம் இடுப்பு மற்றும் தோளபட்டையில் வீக்கமும், முகத்தில் இரத்தகாயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் என் மாமாவிற்கு போன் மூலம் தகவல் சொன்னவுடன் என் மாமா வந்து என்னை மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார். என்னுடன் வந்து என் மகளுக்கும் அடிப்பட்டு மூக்கில் இருந்து இரத்தம் வந்தது. எனது மகளையும் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் போது சார்பு ஆய்வாளர் வந்து என்னை விசாரித்து பதிவு செய்துள்ளார். சார்பு ஆய்வாளரிடம் விசாரித்த போது மூலக்கடையை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் தான் என் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறினார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.